**உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் - (புற நெகும) - 2021**

உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 2790–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) மற்றும் 2016 நவம்பர் 02 ஆந் திகதிய 3431–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாகக் காணப்படுகின்றன. கணக்களிப் பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளினூடாக செயற்திட்டத்தின் முன்னேற்றமடைந்த உள்ளூராட்சி உட்கட்டமைப்பு செயற்பாடுகள் மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நீடித்த சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அபிவிருத்தி குறைந்த 07 மாகாண பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளினை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் பின்தொடர் கடன்களின் நோக்கமாகும். ஆகையினால், நீர் வழங்கல் முறைமைகளின் முன்னேற்றம், உட்கட்டமைப்பு அடிப்படை சேவை வழங்கல் உள்ளூராட்சி கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் இயலளவுகளை வலுப்படுத்துதல் தொடர்பான சிக்கல்கள் முன்வைக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. 2790 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,339.33 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9.8 மில்லியன் மிகுதி மதிப்பிடப்பட்ட கிரயம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்பட்டது. 3431 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) பின்தொடர் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 8,700 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் மேலதிக கடன் ஆரம்ப செயற்திட்டத்தின் செயற்திறனை அதிகரிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்டது. மதிப்பிடப்பட்ட மொத்த செயற்திட்ட கிரயம் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 1,071.47 இற்கு சமமான ஐ.அ.டொலர் 7.8 மில்லியனுடன் சேர்த்து ரூபா 9,771.47 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 67.8 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட செயற்பாடுகளின் பூர்த்திசெய்தல் திகதி 2023 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 19 ஆம் திகதிய ளு/ஸ்ரீ/ளுடீ/ஊசைஉ-ரட யச/06/2019 ஆம் இலக்க ஜனாதிபதி செயலக சுற்றறிக்கை மற்றும் 2020 செப்தெம்பர் 03 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 4.ஈ ஆம் பந்தி | செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக ஆலோசனை நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் காலப்பகுதி 2019 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையாமல் 24 மாதங்களால் நீடிக்கப்பட்டது. | தவிர்க்கமுடியாத காரணங்களினால் செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்பட வேண்டியிருந்ததால் செயற்திட்டத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் அனைத்து பொருத்தமான அங்கீகாரமும் பெற்ற பிறகு 2019.12.31 ஆம் திகதியிலிருந்து 24 மாதங்களுக்காக ஆலோசனை சேவையும் நீடிக்கப்பட்டது. | செயற்திட்ட ஆலோசனை பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் 02 மாதங்களிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 04 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

செயற்திட்ட அமுல்படுத்தல் திட்டங்களின் பிரகாரம், 07 மாகாணங்களில் அவர்களின் உட்கட்டமைப்பு ரீதியான தேவைப்பாடுகளினை மேம்படுத்துவதற்கு 105 உள்ளூராட்சி சபைகளுக்கு செயற்திட்டம் உதவியளித்திருந்ததுடன் 178 உள்ளூராட்சி சபைகளின் தொடர்புடைய அபிவிருத்தி வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் பிற்சேர்க்கை கடன் வசதிகளின் கீழ் 29 உள்ளூராட்சி சபைகளில் 29 நீர் வழங்கல் செயற்திட்டங்கள், 35 நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் 11 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் 23 உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் முன்னைய ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 8 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் 02 உட்கட்டமைப்பு

செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அத்தகைய செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றத்துடன் தொடர்புடைய விடயங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

### 3.1.1 உப செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | படிக்கை செயற்பாடு | பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | தாமதம் (மாதங்கள்) | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| (அ) | மின்னேரியா நீர் சுத்திகரிப்பு பொறி மேம்படுத்துவதற்கான மிகுதிப் பணி | 2020 மார்ச் 24 | 08 | 01. மூலப்பொருள் இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக<br>02. ஏடிபி மற்றும் உள்நாட்டு நிதிகளின் கொடுப்பனவு தாமதம்<br>03. என்டபில்யுஎஸ்டிபி அங்கீகாரத்தின் தாமதம் மற்றும் என்டபில்யுஎஸ்டிபி மூலம் மூலப்பொருட்கள் வழங்களின் தாமதம். |
| (ஆ) | செவகம கால்வாய் 3 பகுதி வரையான குழாய் வரிசைகளின் நீடிப்பு மற்றும் செவகம நீர் கோபுரம் வரையான பரிமாற்றல் பிரதான நீடிப்பு - தமன்கடுவ பி.ச | 2020 பெப்ரவரி 24 | 19 | 01. என்டபில்யுஎஸ்டிபி மூலம் குழாய் வரிசை தடயத்தை மாற்றியதால் குழாய் பதிக்க தாமதமானது.<br>02. வெடிக்கும் மூலப்பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் வெடிக்க அனுமதி பெறுவதில் உள்ள சிரமங்கள்<br>03. தொல்பொருள் திணைக்களத்தினால் பணிகள் இடைநிறுத்தம்.<br>04. ஏடிபி மற்றும் உள்நாட்டு நிதி பற்றாக்குறை காரணமாக கொடுப்பனவு தாமதம்.<br>05. செவகம கோபுரத்தின் வடிவமைப்பு மாற்றங்கள் காரணமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | தம்பல நீர் வழங்கள் திட்டத்தின் நீடிப்பு | 2020 பெப்ரவரி 06 | 13 | 01. வெடிக்கும் மூலப்பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் வெடிக்க அனுமதி பெறுவதில் உள்ள சிரமங்கள்<br>02. ஏடிபி மற்றும் உள்நாட்டு நிதி பற்றாக்குறை காரணமாக கொடுப்பனவு தாமதம்.<br>03. வடிவமைப்பு மாற்றங்கள் காரணமாக மேலதிகமாக கூடுதல் பணி செய்யப்பட்டது. |
| (ஈ) | நுவரவெவ நீர் சுத்திகரிப்பு பொறியின் இயலளவை மேம்படுத்துதல். | 2020 மார்ச் 24 | 17 | -மேற்படி- |
| (உ) | கலேவேவ சுத்திகரிப்பு பொறியினை மேம்படுத்தல் | 2020 செப்தெம்பர் 15 | 15 | ஏனைய காரணிகளுக்கு மேலதிகமாக ஒப்பந்தக்காரர்களின் செயலாற்றல் நலிவு காரணமாக தாமதம் ஏற்படுகிறது. |
| (ஊ) | கெபிதிகொல்லாவ நீர் வழங்கல் திட்டத்தினை மேம்படுத்தல் | 2020 யூன் 22 | 08 | 01. சாதாரன வெடிப்பிலிருந்து வெடிப்பினை கட்டுப்படுத்துவதற்கான வேலை வேறுபட்டது.<br>02. வெடிக்கும் மூலப்பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் வெடிக்க அனுமதி பெறுவதில் உள்ள சிரமங்கள்<br>03. கொடுப்பனவு தாமதங்கள். |
| (எ) | நிக்கவெரட்டியவில் உள்ள நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம் – அம்பன்பொல | 2019 திசெம்பர் 31 | 24 | கொவிட் 19 மூலம் கடுமையாக பாதிக்கப்பட்டது. |
| (ஏ) | பனாங்கொட மற்றும் குருஸவத்த குடிநீர் வழங்கல் செயற்திட்டத்தினை நிர்மாணித்தல் | 2020 ஏப்ரல் 29 | 17 | ஏனைய காரணிகளுக்கு மேலதிகமாக ஒப்பந்தக்காரர்களின் செயலாற்றல் நலிவு காரணமாக தாமதம் ஏற்படுகிறது. |
| (ஐ) | இனாமலுவ மற்றும் கித்துல்ஹிட்டியாவ வரையான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | 2020 மாரச் 04 | 12 | மூல நோக்கத்திற்கு வெளியே மேலதிக குழாய் பதிக்க அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு கால நீடிப்பு வழங்கப்பட்டது.<br>2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 2020 ஆம் ஆண்டின் போதும் அனுபவித்த உள்ளுர் நிதிகளுக்கான மீள்நிரப்பல் மற்றும் போதுமான வெளிநாட்டு நிதி ஒதுக்கீடு பெறவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | சீகிரியா மற்றும் ஹபரணைக்கான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | 2020 ஏப்ரல் 02 | 20 | என்எஸ்சி இனால் அங்கீகரிக்கப்பட்டதற்கு அமைவாக கால நீடிப்புடன் மேலதிக வேலையும் வழங்கப்பட்டது. |
| (ஓ) | பொல்கொல்லவில் பிஎஸ் அலுவலகம், நூலகம் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் | 2019 நவம்பர் 13 | 17 | காணி பிரச்சனை காரணமாக மீள வடிவமைக்கப்பட்டது. |
| (ஔ) | கதிரன கேட்போர்கூடத்தினை நிர்மாணித்தல் | 2019 யூன் 26 | 29 | தளபாடம் தவிர பூர்த்தியாக்கப்பட்டது. தளபாடத்திற்கான பெறுகை செயற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. |
| (க) | சந்தையுடன் கூடிய பலநோக்கு கட்டடத்தின் நிர்மாணம்-மஹாபகே | 2019 பெப்ரவரி 08 | 31 | வெலிசர கடற்படை முகாம் அருகே அமையப்பெற்றமையால் கொவிட் 19 மூலம் கடுமையாக பாதிக்கப்பட்டது. |
| (கா) | கெகுநடுர உப நகரத்தை மேம்படுத்துதல் | 2020 மார்ச் 07 | 18 | பிரதேச சபை மூலம் முன்பக்க கட்டடத்தை இடமாற்றப்படுதல் காரணமாக தாமதமாகியது. |
| (கி) | வரக்காபிட்டியவில் தகன மற்றும் இறுதிச் சடங்கு நிலையத்தை நிர்மாணித்தல் | 2020 ஜனவரி 21 | 11 | காணிப்பிரச்சனையின் தாமதம் |
| (கி) | ஹோமாகம நகரில் கழிவறைத் தொகுதியுடன் கூடிய பொதுச் சந்தை மற்றும் வாகன தரிப்பிடத்தை நிர்மாணித்தல் | 2019 நவம்பர் 13 | 10 | பிரதேச சபை மூலம் கழிப்பறையை இடிப்பதில் தாமதம் |
| (கீ) | வட்டுவவில் பொது சந்தையை நிர்மாணித்தல். | 2020 மார்ச் 22 | 21 | வடிவமைப்பு மாற்றங்கள் காரணமாக ஆரம்ப தாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்**

நலிவாக செயற்படுகின்ற ஒப்பந்தக்காரர்கள் இருப்பது உண்மைதான். எனினும், செயல்திறன் குறைபாட்டிற்கான பிரதான காரணங்கள் பின்வருமாறு,

- நேர் மற்றும் மறைமுகமான கொவிட் 19 இன் விளைவு
- அரசினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள்.
- ஒதுக்கீட்டு குறைபாடு.்.ஒப்பந்தக் கொடுப்பனவுக்கான மீள்நிரப்பல் காரணமாக பெரும்பாலும் அனைத்து ஒப்பந்தக்காரர்களும் 2020 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

தேவையான தர நிலையை உறுதிப்படுத்தி சிவில் வேலைகளை உடனடியாக பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரருக்கு செயற்திட்டமானது தாக்கத்கை செலுத்த வேண்டும்.

### 3.1.2 செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன..

| இல. | செயற்பாடுகள் | ஒதுக்கீடு ரூபா மில்லியன் | ஆரம்பித்த திகதி | தாமதமான மாதங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | கலாவெவ சுத்திகரிப்பு பொறியை மேம்படுத்துதல் | 387 | 2019 மார்ச் 15 | 24 | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | ஒப்பந்தங்களின் சாத்தியமான கிரய அதிகரிப்புக்கள் மற்றும் தேவையற்ற கால நீடிப்பு என்பன தவிர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | கெபிதிகொல்லாவ நீர் வழங்கள் திட்டம் | 35 | 2019 செப்டம்பர் 19 | 28 | செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | தம்புள்ளை கிராமப் பகுதி மற்றும் கந்தளம ஆகியவற்றிற்கான நீர் வழங்கல் விரிவாக்கம் | 564 | 2019 பெப்ரவரி 28 | 22 | செல்லுபடியான காரணங்களுக்காக மாத்திரம் இஒடி வழங்கப்படும். அக்காலப்பகுதிக்கு மேலாக எல்டி அமுல்படுத்தப்படும். | -மேற்படி- |
| (ஈ) | இனாமலுவ மற்றும் கித்துல்ஹிட்டியாவவிற்கான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | 491.99 | 2019 ஜனவரி 02 | 21 | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | சீகிரியா மற்றும் ஹபரணை பகுதிகளுக்கான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம். | 415 | 2019 ஜனவரி 02 | 21 | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | பத்தலயாய மற்றும் பெலகன்வெவவில் விநியோக வலையமைப்பை வழங்கி அமைத்தல். | 284 | 2019 ஜனவரி 17 | 21 | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (எ) | பத்தலயாய மற்றும் பெலகன்வெவ சுத்திகரிப்பு பொறி | 506.7 | 2019 ஜனவரி 17 | 21 | விலைமனு மதிப்பீட்டு செயற்பாட்டின் தாமதங்கள் | -மேற்படி- |
| (ஏ) | மதுரங்குளியவில் பலநோக்கு கட்டட நிர்மாணம் | 30 | 2019 ஜனவரி 27 | 21 | பூர்த்தியாக்கப்பட்டு பிரதேச சபையிற்கு கையளிக்கப்பட்டது. | -மேற்படி- |
| (ஐ) | மஹாவில குருஸ்வத்த குடிநீர் வழங்கல் செயற்திட்டம் | 33 | 2019 மார்ச் 01 | 23 | செல்லுபடியான காரணங்களுக்காக மாத்திரம் இஒடி வழங்கப்படும். | -மேற்படி- |
| (ஒ) | கெகுநடுர உப நகரத்தை மேம்படுத்துதல் | 85.24 | 2019 மார்ச் 08 | 23 | பூர்த்தியாக்கப்பட்டது. | -மேற்படி- |
| (ஓ) | வரகபிடியவில் மயான நிர்மாணம் | 50 | 2019 மார்ச் 01 | 23 | பெரும்பாலும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஔ) | வட்டுவவில் பொது சந்தை நிர்மாணம் | 63.42 | 2019 மார்ச் 11 | 23 | செல்லுபடியான காரணங்களுக்காக மாத்திரம் இஒடி வழங்கப்படும். | -மேற்படி- |
| (க) | கருவலகஸ்வெவவில் நீர் வழங்கல் திட்டம் | 324.77 | 2019 ஜனவரி 06 | 33 | செல்லுபடியான காரணங்களுக்காக மாத்திரம் இஒடி வழங்கப்படும். டொலர் பெறுமதி அதிகரிப்பு மற்றும் தடைவிதிப்பு காரணமாக இறக்குமதியில் தாமதம் | -மேற்படி- |
| (கா) | பஹலடிக்கல்ல கி.சே. பிரிவுக்கான நீர் வழங்கல் விரிவாக்கம் | 124.89 | 2019 நவம்பர் 16 | 43 | செல்லுபடியான காரணங்களுக்காக மாத்திரம் இஒடி வழங்கப்படும். குறிப்பிட்ட பகுதியின் முடக்கம் கடுமையாக பாதிக்கப்பட்டது. | -மேற்படி- |

### 3.1.3 செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை

2017 ஏப்ரலிற்கு முன்னர் பின்வரும் உபசெயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும் அவ் உபசெயற்திட்டங்கள் 2022 யூன் 30 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| இல. | செயற்பாடுகள் | ஆரம்பிப்பதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | மதிப்பிடப்பட்ட பெறுமதி<br>ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ விநியோக முறைமைக்கான நீர் வழங்கல் திட்டம் | ஏப்ரல் 2017 | 1,270 | நீர் மூலத்தின் கொள்ளளவு மற்றும் நிதிகள் போதியளவு இன்மை காரணமாக செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | உபசெயற்திட்டம் இயன்றளவு விரைவாக தொடங்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாகக் கைநூலில் உள்ள வேலைப் பட்டியல்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ திட்டத்திற்கான நீர் சுத்திகரிப்பு பொறி | -மேற்படி- | 430 | நீர் வளம், கொள்ளளவு, செயற்திட்ட நிதிப் பற்றாக்குறை காரணமாக செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | போர்ஹேல் பம்பி இல்ல குளோரினேட்டர்களின் (உாடழசயைவழசள) நிர்மாணம் – மத்திய மாகாணம் (மூன்று இலக்கங்கள்) | -மேற்படி- | 60 | நீர் வள ஆதாய சோதனை முடிவு தோல்வயடைந்து செயற்திட்டத்தை கலைப்பதற்கு என்டபில்யுஎஸ் மற்றும் டிபி என்பன அறிவுறுத்தியது. | -மேற்படி- |
| (ஈ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ திட்டத்திற்கான உட்செலுத்துதல் தொட்டி (ஐவெயமந வயமெ) | -மேற்படி- | 100 | நீர் வளம் , நிதிகள், நேரம் ஆகியவற்றின் பற்றாக்குறை காரணமாக செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | -மேற்படி- |
| (உ) | கொட்டகலையில் பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | -மேற்படி- | 50 | தேசிய வழிகாட்டல் குழுவால் அறிவுறுத்தப்பட்டவாறு காணிப் பிரச்சனை காரணமாக கைவிடப்பட்டது. | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஊ) | ஆர்கரபத்தனவில் பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | -மேற்படி- | 50 | தேசிய வழிகாட்டல் குழுவால் அறிவுறுத்தப்பட்டவாறு காணிப் பிரச்சனை காரணமாக கைவிடப்பட்டது. | -மேற்படி- |

**3.2 விளைவற்ற/பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**I முன் அலுவலக முறைமை மற்றும் ஈ-புறநெகும மென்பொருள**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் மூலம் 137 பிரதேச சபைகளுக்கான வன்பொருளுடன் வழங்கும் ''முன் அலுவலக முறைமை'' எனப்படும் தகவல் தொழில்நுட்ப தீர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட முன் அலுவலக முறைமைக்கு உதவுவதற்கு பின் அலுவலக முறைமை இல்லாததால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடையவில்லை என அவதானிக்கப்பட்டது. மத்திய மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணத்தில் உள்ள 41 உள்ளுராட்சி நிறுவனங்களில் 17 பிரதேச சபைகள் மேற்கூறிய முறையை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை என்பதுடன் 16 பிரதேச சபைகள் மேற்படி முறைமையை அமுல்படுத்தாமல் புதிய மாற்று மென்பொருளை கொள்வனவு செய்துள்ளன என்று மேலும் வெளிப்படுத்தப்பட்டது | சில பிரதேச சபைகள் மதிப்பீட்டு வரியை அறவிடுவதில்லை என்பதுடன் அவ்வகையான பிரதேச சபைகளில் இம்முறையானது செயற்படுவதில்லை. | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக சொத்துக்கள் மற்றும் மென்பொருள் என்பவற்றை பயன்படுத்தவும், மென்பொருளின் பலவீனத்தை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## II சிவில் மற்றும் நீர் வழங்கல் செயற்திட்டங்கள்

| இல | விளைவற்ற சொத்துக்கள் | விளைவற்ற ஆண்டுகளின் காலப்பகுதி | ஏற்பட்ட கிரயம் ரூபா மில்லியன் | காரணங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | பொல்பிட்டிகம நீர் வழங்கல் முறைமை | $03^{½}$ | 58.32 | தேவையற்ற நிர்மாணம் | பொல்பித்திகம பிரதேச சபைக்கு உலாவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பயனற்ற செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீகஹகியுல பேருந்து நிலையம் | $3^{2.\because.3}$ | 48.05 | அணுகும் வீதியின் குறைபாடு காரணமாக | அ)குறுகிய தூரங்களுக்காக ஒற்றை கதவு பேருந்துகள் ஓடுவதற்கு 2021.04.17 ஆம் திகதி பேருந்து நிலையம் தொடங்கப்பட்டது.<br><br>(ஆ)மஹியங்கனை பதுளை வீதிகளுடன் இணைப்பதற்கு வீதிப் பிரிவிற்காக காணியை கொள்வனவு செய்வதற்கு காணி சுவீகரிப்பு செயற்பாடு செயன்முன்னேற்றத்தில் உள்ளது. | பஸ் நிலையத்தை பயன்படுத்தும் பொருட்டு அணுகும் வீதியை நிர்மாணிப்பதற்கு பிரதேச சபைக்கு உதவியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பண்டாரவளை பிரதேச சபையில் வாராந்த சந்தை, பலநோக்கு கட்டடம், கழிவறைகள், நீர் வழங்கல் | $4^{2.\because.12}$ | 35.86 | வீதி அணுகல் காணப்படாமை, நீர் வளம் மற்றும் கழிவறைக | இடப்பிரச்சினை காரணமாக வாராந்த சந்தை இன்னும் செயற்படவில்லை. புகையிரத திணைக்களம் | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக கட்டடம் மற்றும் ஏனைய அபிவிருத்தி பணிகளை பயன்படுத்துவதற்கு தேவையான |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | முறைமை | | | ளை பராமரிப்பதற்கு நீர் வழங்கல் பற்றாக்குறை | நிலமொன்றை விடுவிக்க உடன்பட்டுள்ளதுடன் மேலதிக இடத்துடன் பிரதேச சபை விரைவாக திறப்பதற்கு உடன்பட்டுள்ளது. | வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஈ) | றத்தோட பிரதேச சபையின் வாராந்த சந்தை | 5[¾] | 12.06 | றித்துரைக்கப்பட்ட திட்டத்துடன் . இணங்கப்படவில்லை என்பதற்காக விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்காக கட்டடத்தை மாற்றுவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. | பிரதேச சபையினால் 10 சிறுகடைகள் விற்பனையாளர்களுக்கு விலைமனுகோரப்பட்டுள்ளதுடன் கட்டடத்தின் மேல் மாடி நூலகமாக பயன்படுத்தப்படுகின்றது. எனினும், கொவிட் 19 விளைவு காரணமாக அனைத்து கடைகளும் நூலகமும் செயற்படவில்லை. | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக கட்டடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கிரம பேருந்து நிலையம் | 4[2.3] | 36.29 | அணுகல் வீதி காணப்படாமை | பேருந்து நிலையம் (தரை தளம்) செயற்படுகின்றது. குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக மேல் தளத்தை பயன்படுத்த பி.ச உடன்பட்டுள்ளது. | பேருந்து நிலையத்தை பயன்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடடிவக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | வில்கமுவ மயானம் | 4[1.4] | 16.52 | தகனத்துக்கான கேள்வி குறைபாடு | செயற்படுகின்றது. | வில்கமுவ பிரதேசத்தில் மயானம் நிர்மாணிக்கப்படுவதன் தேவையை முறையாக மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன் செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதிகள் வீணாக்கப்படாமல் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (எ) | வனதவில்லுவ நீர் வழங்கல் முறைமை | $03^{1/2}$ | 64.83 | எதிர்பார்த்த படி பிரதேச சபையால் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட வில்லை. | என்டபில்யுஎஸ் மற்றும் டிபி இணைப்புக்கள் பெறப்பட்டு செயற்திட்டம் செயற்படுகின்றது. | பயனாளிகளுக்கு வசதிகளை வழங்குவதற்காக செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பட வேண்டும். |
| (ஏ) | ரெதீகம பல்நோக்கு கட்டிடம் மற்றும் பேருந்து நிலையம் | $03^{3.\because.4}$ | 44.05 | நிர்மாணத்தின் ஒரு பகுதி பூர்த்தியாக்கப்படவில்லை. | கட்டிடம் மற்றும் பேருந்து நிலையம் என்பன திறக்கப்பட்டு செயற்படுகினி்றது. | -மேற்படி- |
| (ஐ) | மாவதகம பேருந்து நிலையம் | 04 | 43.79 | நிர்மாணப் பணிகளின் ஒரு பகுதி பூர்த்தியாக்கப்படவில்லை. | பேருந்து நிலையம் செயற்படுகின்றது. மேல் தளத்தின் நிர்மாணப் பணிகள் கூட பிரதேச சபையினால் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது. | நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | வல்கமுவ நீர் வழங்கல் திட்டம் | 4 | 39.98 | முறையான திட்டம் காணப்படாமையும் நீர் தாங்கிகளினை நிர்மாணித்தலில் அடிப்படை மட்டம் கருத்திற்கொள்ளப்படவில்லை | துணைத்திட்டத்தை ஒருங்கிணைப்பதற்காக மேலதிக நிதியீட்டத்தின் கீழ் எ.டபில்யு 01 ஒப்பந்தத்துடன் புதுப்பிக்கும் பணிகள் நடைபெறுகின்றது. | நிபுணர்களுடன் ஆலோசித்து தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | டிக்லன்த நீர் வழங்கல் திட்டம் | 4 1/6 | 28.62 | சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. இதன்காரணமாக நிர்மாணம் விளைவற்றதாக இருந்தது. | செயற்திட்டத்தில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டு தற்போது செயற்படுகிறது. | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஔ) | ஆறுதல் நிலையம்-இபலொகம | $4^{5/6}$ | 2.81 | சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. இதன்காரணமாக நிர்மாணம் விளைவற்றதாக இருந்தது | துணை செயற்திட்டம் செயற்படுகிறது. | -மேற்படி- |
| (க) | பொலன்னறுவை மாவட்டத்தில் பண்டிவெவ நீர் வழங்கல் திட்டத்தின் தம்பலவெவ விரிவாக்கத்திற்கான நீர் வழங்கல் விரிவாக்கம். | 3 5∵12 | 77.60 | இவ் நீர் வழங்கல் திட்டத்திற்காக மின்னேரிய நீர் சுத்திகரிப்பு பொறியின் கொள்ளளவு போதாமை. | என்.டிபில்யு மற்றும் டி.பி மூலம் மின்னேரிய நீர் சுத்திகரிப்ப பொறி விருத்தி செய்யப்படவில்லை. | -மேற்படி- |
| (கா) | செவகம கால்வாய் 03 பிரதேசத்திற்கான குழாய் வரிசை விரிவாக்கம் மற்றும் செவகம நீர் கோபுரம் வரைக்கும் பரிமாற்றல் பிரதான விரிவாக்கம். | 1 7∵12 | 428.35 | என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேஉளுருனுடீ) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்படவில்லை. | கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி என்.டபில்யு.எஸ் மற்றும் டி.பி (றேஉளுருனுடீ) என்பவை உள்நாட்டு இணைப்புக்களை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளது. | -மேற்படி- |
| (கி) | பொலன்னறுவை மாவட்டத்தில் தம்பல நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம். | 1 1∵12 | 269.72 | எதிர்பார்த்தபடி என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேஉளுருனுடீ) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- | நீர் வழங்கல் இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கு) | அனுராதபுர மாவட்டத்தில் எலகமுவ பிரதான மற்றும் விநியோக முறைமைக்கான நீர் வழங்கல் | 1 1∵3 | 406.37 | எதிர்பார்த்தபடி என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேஉளுருனு | கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி என்.டபில்யு.எஸ் மற்றும் டி.பி (றேஉளுருனுடீ) | நீர் வழங்கல் இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விரிவாக்கம். | | | ட) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட வில்லை. | என்பவை உள்நாட்டு இணைப்புக்களை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளது. | |
| (கூ) | கெபிதிகொல்லாவ நீர் வழங்கல் திட்டத்தினை மேம்படுத்தல், வ.ம.மா | 2∴3 | 32.23 | எதிர்பார்த்தபடி என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேுளுரூனுட) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட வில்லை. . | -மேற்படி- | -மேற்படி- |
| (கெ) | அனுராதபுர மாவட்டத்தில் ராஜங்கனய, நமல்கமுவ மற்றும் கந்தேகம என்பவற்றின் தற்போதிருக்கும் நீர் வழங்கல் திட்டத்தினை மேம்படுத்தல். | 1 3∴4 | 27.14 | எதிர்பார்த்தபடி என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேுளுரூனுட) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (கே) | நாத்தாண்டிய பிரதேச சபைக்கான பனாங்கொட மற்றும் குறுஸ்வ்ட்ட நீர் வழங்கல் திட்டத்தினை நிர்மாணித்தல். | 1 5∴12 | 44.77 | எதிர்பார்த்தபடி சி.ஓ.பி (ஊழுட) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட வில்லை. | கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி பிரதேச சபையானது உள்நாட்டு இணைப்புக்களை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளது. | நீர் வழங்கல் இணைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கை) | ரிதீமலியட்டவுக்கான நீர் வழங்கல் திட்டம் (குரலவெல, எகிரியன்கும்புர ) | 2 5∴6 | 137.92 | எதிர்பார்த்தபடி என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேுளுரூனுட) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்பட வில்லை. | கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி என்.டபில்யு.எஸ் மற்றும் டி.பி (றேுளுரூனுட) என்பவை உள்நாட்டு இணைப்புக்களை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளது. | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (கொ) | றஹதங்கம, குமரகம, குகுறம்பொல ஆகியவற்றுக்கான நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (புத்தல நீர் வழங்கல் திட்டம்) | 1 1.∵.12 | 285.94 | எதிர்பார்த்தபடி என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேுளுரூனுடீ) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்படவில்லை. | . -மேற்படி- | -மேற்படி- |
| (கோ) | இனாமலுவ மற்றும் கிதுல்ஹிடியாவ வரையான நீர் வழங்கல் விரிவாக்கத்தினை நிர்மாணித்தல் | 1 | 491.99 | எதிர்பார்த்தபடி என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேுளுரூனுடீ) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (கௌ) | சீகிரிய மற்றும் ஹபரண வரையான நீர் வழங்கல் விரிவாக்கத்தினை நிர்மாணித்தல் | 1 2.∵3 | 415.30 | எதிர்பார்த்தபடி என்டபில்யுஎஸ் மற்றும் டிபி (றேுளுரூனுடீ) மூலம் நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ங') | நாத்தாண்டிய பிரதேச சபைக்காக துன்கன்னுவவில் புதிய நூலக கட்டிட நிர்மாணம். | 1 5.∵.12 | 26.66 | நேர் மற்றும் மறைமுகமான கொவிட் 19 தொற்றுப்பரவலின் விளைவு. | கட்டிடம் செயற்படுகின்றது. | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஙா) | புத்தளம் பிரதேச சபைக்கானக மதுரங்குளியவில் புதிய நூலக கட்டிட நிர்மாணம். | 1 5.∵6 | 34.70 | நேர் மற்றும் மறைமுகமான கொவிட் 19 தொற்றுப்பரவலின் விளைவு. | கட்டிடம் செயற்படுகின்றது . | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஞி) | பொல்கஹவெல பிரதேச சபைக்காக பொல்கஹவெலயில் புதிய சந்தை தொகுதிக் கட்டிடத்தினை நிர்மாணித்தல். | 2 1∴6 | 60.55 | புதிய சந்தை தொகுதிக் கட்டிடத்தினை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | நிர்மாணத்தின் இரண்டாம் கட்டம் உள்ளூராட்சி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு நிர்மாணம் பூர்த்தியான பிறகு உடனேயே இதனை அமுல்படுத்த முடியும். | -மேற்படி- |
| (ஞீ) | கடான பிரதேச சபைக்காக கதிரனயில் கேட்போர்கூடம் ∴ சமூக மண்டபத்தின் நிர்மாணம் | 1 1∴12 | 74.84 | கேட்போர்கூடம் ∴சமூக மண்டபத்தினை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஞ') | தங்கல்ல பிரதேச சபைக்காக நெடொல்பிடியவில் வாராந்த சந்தை நிர்மாணம் மற்றும் பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | 3 | 56.46 | சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. இதன்காரணமாக நிர்மாணம் விளைவற்றதாக இருந்தது. | இவ் உபசெயற்திட்டமானது பிரதேச சபை மூலம் தெரிவு செய்யப்பட்டு மாகாண சபையினால் பரிந்துரைக்கப்பட்டு அமைச்சுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. இவ்வாராந்த சந்தையானது ஆரம்ப கட்டத்தில் தொழிற்பட்டாலும் கொவிட் தொற்றுநோயக்குப் பிறகு செயற்படவில்லை. விலைமனு அழைக்கப்பட்டாலும் எவ்வித பதிலளிப்பும் வரவில்லை என உள்ளூராட்சி அதிகார சபையின் செயலாளர் தெரிவித்தார். | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (நூ) | குருநாகலை பிரதேச சபைக்கான குருநாகலயில் புதிய பலநோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல் | 1 1∵.4 | 55.74 | உடற்பயிற்சி நிலையம் மற்றும் உணவகம் என்பவற்றை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | உடற்பயிற்சி நிலையம் மற்றும் உணவகம் என்பன செயற்பாட்டிலில்லை. ஏனைய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. | -மேற்படி- |
| (நெ) | மஹர பிரதேச சபைக்காக பஹல கரகஹமுனவில் தின பராமரிப்பு நிலையம், ஆயர்வேத நிலையம், பொது நூலகம் மற்றும் பிரதேச சபை அலுவலகம் என்பவற்றை உள்ளடக்கி பலநோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல் - கட்டம் 01 | 2 1∵.3 | 68.74 | பொது நூலகத்தை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | ஆயர்வேத நிலையம், பொது நூலகம் ஆகியவற்றுக்கான அவசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் விரைவாக செயற்படுத்தப்படும் எனவும் உள்ளூராட்சி அதிகார சபை தெரிவிக்கின்றது. | -மேற்படி- |
| (நே) | களுத்துறை பிரதேச சபைக்காக வஸ்கடுவ நகரத்தில் வாகன தரிப்பிடம், பிரதேச சபை பிரதான அலுவலகம், பிரதேச சபை அவை, மற்றும் கேட்போர்கூடம் ஆகியவற்றை உள்ளடக்கி அலுவலக கட்டிடத்தினை நிர்மாணித்தல். | 2 1∵.6 | 68.32 | கேட்போர்கூடத்தினை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | கட்டிடம் செயற்பாட்டில் உள்ளது. | -மேற்படி- |
| (நை) | பேருவளை பிரதேச சபைக்காக அலுத்கமவில் ஆயர்வேத நிலையம், பிரதேச சபை பிரதான அலுவலகம், பிரதேச சபை | 1∵.2 | 70.24 | பொது நூலகத்தை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | பழைய கட்டிடத்தில் ஆயர்வேத நிலையம் மற்றும் பொது நூலகம் என்பன பராமரிக்கப்பட்டது. புதிய கட்டிடத்தில் நூலகத்திற்காக ஒதுக்கிடப்பட்ட இடம் | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அவை, பொது நூலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய அலுவலக தொகுதியை நிர்மாணித்தல்- கட்டம் 1 | | | | ஆயர்வேத நிலையத்துக்காக பயன்படுத்தப்படுகின்றது. பழைய கட்டிடத்தின் முழு இடத்தையும் பயன்படுத்தி நூலகம் செயற்படுத்தப்படுகின்றது. | |
| (ஞெ) | புத்தளம் பிரதேச சபைக்காக மதுரங்குளியவில் பலநோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல் | 1 1∴.6 | 61.69 | கடைகளை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | அவதானத்துடன் உடன்பட்டுள்ளது. இரு கடைகள் விளைவற்றதாக உள்ளன. | -மேற்படி- |
| (ஞோ) | உடுநுவர பிரதேச சபைக்காக கெலியோயவில் வாகன தரிப்பிடம் மற்றும் பொதுச் சந்தை என்பவற்றை நிர்மாணித்தல். | 1 5∴.6 | 60.85 | கடைகளை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | ஆறு கடைகளுக்காக தற்போது விலைமனுகோரப்பட்டுக்கொண்டிருக்கின்றது. | -மேற்படி- |
| (ஞௌ) | களனிய பிரதேச சபைக்காக நஹெனயில் மகப்பேற்று சிகிச்சை நிலையம், முன்பள்ளி, இளைஞர் நிலையம், நூலகம் மற்றும் பலநோக்கு மண்டபம் என்பவற்றை உள்ளடக்கிய பலநோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல். | 1∴3 | 67.40 | மகப்பேற்று சிகிச்சை மற்றும் இளைஞர் நிலையம் என்பவற்றை பயன்படுத்துவதற்கான பொருத்தமான திட்டம் காணப்படவில்லை. | மகப்பேற்று சிகிச்சை மற்றும் இளைஞர் நிலையம் என்பன செயற்படவில்லை என்ற அவதானத்துடன் உடன்பட்டுள்ளது. | -மேற்படி- |

**3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (ை) | **செயற்திட்ட முகாமைத்துவ ஆலோசகர்கள்** செயற்திட்டத்தின் பிரதான ஆலோசகருக்காக ஒதுக்கிடப்பட்ட காலம் 285.65 மனித மாதங்கள் அல்லது 59 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி ஆலோசனை உடன்படிக்கையில் குறிப்பிட்ட ஆலோசனை கட்டணம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக 41.5 மில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. | அனைத்து முரண்களுக்காகவும் அமைச்சு பெறுகை குழு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் அனுமதியுடன் மிகைத் தொகைக்கு செயற்திட்ட பணிப்பாளர் கையொப்பமிட்டார். | செயற்திட்டம் இதன் பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்பதோடு வீண் செலவுகளையும் தவிர்க்க வேண்டும். |
| (ைை) | **உள்ளக கணக்காய்வு ஆலோசகர்** தொழில்நுட்ப கணக்காய்வுக்காக ஒரு வருடத்துக்கு பொறியியலாளர் ஒருவர் தனியாள் ஆலோசகராக தெரிவுசெய்யப்பட்டார். அமைச்சின் செயலாளர் மற்றும் தொழில்நுட்ப கணக்காய்வு ஆலேசாகர் என்பவர்களால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசகர் இறுதி அறிக்கையில் விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை பதிவு செய்ய வேண்டும். எனினும், மேற்குறிப்பிட்ட அறிக்கையில் எவ்வித பிரதான விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனை கருத்திற்கொள்ளாது தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசருக்கு ரூபா 12.47 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளன. | தொழில்நுட்ப கணக்காய்வு ஆலோசகர் செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு ஒப்பந்த பெறுகையை மேற்கொள்வதற்காக உதவினார். | கொடுப்பனவை மீளப்பெறுவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ைைை) | **சொத்து முகாமைத்துவ மென்பொருள்** 2018 திசெம்பர் 15 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை ஒப்பந்தத்தின் கீழ் ஏழு மாகாணங்களில் உள்ள 07 பிரதேச சபைகளுக்கான சொத்து முகாமைத்துவத்திற்காக தேசிய பெறுகை முகவரால் தேவையான பெறுகை நடைமுறையின்றிய முன்னோடி செயற்திட்டத்தின்படி உபசெயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. எனினும், மேற்குறிப்பிட்ட மென்பொருளின் உதவிக்காகவும் பராமரிப்பு முறைமைக்காகவும் மேற்கூறிய ஒப்பந்தத்தில் எவ்வித ஏற்பாடுகளும் காணப்படவில்லை. மேலும், மேற்கூறப்பட்ட உடன்படிக்கையில் உள்ள வேலைத்திட்டத்தின் பிரகாரம் இலங்கையில் உள்ளூராட்சி துறையில் தற்போதுள்ள விதிகள் மற்றும் கையேடுகளை வாசித்து சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏடிபி இன் ஆலோசனையின் அடிப்படையில் பிஎம்யு மற்றும் அமைச்சு இப்பெறுகைக்காகவும் ஏனைய ஒத்த நிறுவனங்களுக்கு வாய்ப்பை வழங்குவதற்கும் (ஏதேனும் இருப்பின்) சிகியுஎஸ் முறையை பின்பற்றின. எனவே, பெறுகை செயற்பாட்டிவ் எவ்வித பிழையும் இல்லை. | தேவையான தரத்தை உறுதி செய்து வேலையை விரைவாக பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரருக்கு செயற்திட்டம் தாக்கத்தை செலுத்த வேண்டும். |